முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1228

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.02.2023, புதன்கிழமை

1. ஞான சக்தியாய் கலியுகம்தன்னில்
   ஞானிகளை படைக்க அவதாரம்புரிந்த
   ஞானதேசிகனே ஆறுமுக அரங்கனே
   ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசிதன்னை
   (சுபகிருது வருடம் தை மாதம் 25 ம் நாள் 08.02.2023, புதன்கிழமை)
   நாட்டிடுவேன் அரங்கன் சக்தி உலகமறிய
   நன்மைகருதி கலியுகத்தில் அவதரித்து
   மண்ணுலகோர்க்கு மாதவதர்மபலத்தை மார்க்கமுடன் எளியவழி வழிகாட்டி
3. வழிகாட்டி உலகோர் அனைவரும்
   வள்ளல் தன்மை பெற்று ஞானிகளாக
   அழியாமை தந்தருளும் அரங்கனே
   அப்பனே உன்னுள் யானிருக்கேன்
4. இருக்கவே உன் சக்திபலம் கூடி
   இதன்வழி உலகோர் உன் ஆசிதீட்சைவழி
   கருத்தாக அவரவரும் கடைத்தேறி
   கலியுகத்தில் நீதேடுகின்ற வண்ணம்
5. வண்ணமுடன் ஞானிகளாகி உலகோர்
   வையகத்தில் ஞானயுகம் படைப்பர்
   பழிபாவ செயல்களில் ஈடுபடா
   பரோபகாரம் எனும் தயவை பெருக்கி
6. பெருக்கியே உலகோர் அனைவருமே பிசகின்றி ஞானவான்களாய்
   பேருலகத்தையே மாற்றும் மகா சக்திகளாவர்
   ஆகவே அரங்கன் உன் தர்மமே உலகை வெல்லும்
   அரங்கன் உன் சன்மார்க்கமே இந்த உலகை மாற்றும்
7. ஜெகமக்கள் உன் வழி வர
   சித்திகள் பல கண்டு அவரவரும்
   அரங்கன் உன்வழி ஞானிகளாகி உயர்வர்
   ஞான ஆட்சியும் படைப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–